பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
10 07 2025 6 30
வியாழக்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. ஐரோப்பிய பல்கலைக் கழகங்களுக்கு முன்பாகவே நாளந்தா உள்ளிட்ட இந்திய பல்கலைக் கழகங்கள் தலைசிறந்து விளங்கியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

2. நெல் ஜெயராமனின் அரும்பணியை போற்றும் வகையில் திருத்துறைப்பூண்டியில் அவருடைய சிலை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

3. உள்ளாட்சி அமைப்புகளில் திமுகவினரின் தலையீட்டால் முறைகேடுகள் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

4. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குறைகூறியுள்ளார்.

5. இந்தியாவுக்கு எதிரான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

--- *இனி விரிவான செய்திகள்* ---

ஐரோப்பிய பல்கலைக் கழகங்களுக்கு முன்பாகவே நாளந்தா உள்ளிட்ட இந்திய பல்கலைக் கழகங்கள் தலைசிறந்து விளங்கியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், பழங்கால இந்தியா அறிவுசார் மையங்களின் தாயகமாக விளங்கியது என்று கூறினார்.

நாளந்தா போன்ற கல்வி நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளுடன் கூடிய அறிவுசார் நூலகங்களை கொண்டிருந்ததை திரு ஜெக்தீப் தன்கர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

>><><><><<

பாரம்பரிய நெல் ரகங்களை வாழ்நாள் முழுவதும் பேணி பாதுகாத்த “நெல் ஜெயராமனின்” அரும்பணியை போற்றக்கூடிய வகையில் திருத்துறைப்பூண்டியில் அவருடைய நினைவாக சிலை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பேசிய அவர், 11 கோடி ரூபாய் செலவில் திருவாரூரில் புதிய வணிக வளாகம் அமைக்கப்படுவதுடன் இம்மாவட்டத்தில் உள்ள வண்டாம்பாளையில் 56 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மாதிரி பள்ளி அமைக்கப்படும் என்றும் அறிவித்தார்.

மன்னார்குடியில் 18 கோடி ரூபாய் செலவில் புதிதாக அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்படும், இம்மாவட்டத்தில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் 43 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் போன்ற அறிவிப்புகளையும் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

>><><><<

உள்ளாட்சி அமைப்புகளில் திமுகவினரின் தலையீடு காரணமாக முறைகேடுகள் அதிகரித்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி குறைகூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளாட்சியில் நல்லாட்சி என முதலமைச்சர் திரு ஸ்டாலின் பேசி வருவது வெற்று விளம்பரமாகி விட்டதாக கூறியுள்ளார்.

தமிழக நலனை கருத்தில் கொள்ளாமல் குடும்ப நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படும் திமுக அரசு ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் நிலவும் இத்தகைய சூழலை மறைப்பதற்காகவே முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஓரணியில் தமிழ்நாடு என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு இருப்பதாக கூறினார்.

தமிழகத்தில் மக்கள் விரோத ஆட்சி நடைபெறுவதாகவும், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

>><><><<

கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு தனி மாவட்டம் அமைக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

கும்பகோணத்தில், கட்சியின் தஞ்சை, திருவாரூர் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய அவர், நவீன வசதிகளுடன் கூடிய புதிய நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கும்பகோணத்தை சுற்றியுள்ள நவக்கிரக கோயில்களை பக்தர்கள் தரிசிக்க இலவச பயண வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று திரு ராமதாசு மாநில அரசை வலியுறுத்தினார்.

>><><><<

கோவை குண்டுவெடிப்பு வழக்கு மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில் நிகழ்ந்த கொலை வழக்குகளில் தேடப்பட்டு வந்த சாதிக் என்கிற டெய்லர் ராஜா, கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டத்தில் தமிழக காவல்துறையின் தீவிரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உளவு தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டதாகவும், கடந்த 29 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவர் என்றும் தீவிரவாத தடுப்புப் பிரிவு காவல்துறை தெரிவித்துள்ளது.

>><><><<

தேசிய மீன்விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, நாகை மாவட்டம் தெற்கு பொய்கை நல்லூரைச் சேர்ந்த பவுல் ராஜ் என்ற விவசாயி மத்திய அரசு நிறைவேற்றி வரும் திட்டங்களால் அதிக வருவாய் கிடைத்து வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - விவசாயி – 40 செகண்ட்ஸ்)

>><><><<

கானா, அர்ஜென்டினா, பிரேசில் உள்ளிட்ட ஐந்து நாடுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட அரசுமுறைப் பயணம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சுதான்சு திரிவேதி, பிரதமரின் இந்த பயணம் பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளதாக கூறினார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது பிரதமர் முன்வைத்த தீவிரவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாத பிரச்சினையில் இந்தியாவுக்கு ஒருமித்த ஆதரவை அந்த மாநாட்டில் அனைத்து நாடுகளும் அளித்ததாக அவர் கூறினார்.

தீவிரவாதத்தால் பாதிக்கப்படுவோரையும் அதை தூண்டி விடுவோரையும் ஒரே நிலையில் வைத்து பார்க்கக்கூடாது என பிரதமர் எடுத்துரைத்ததை திரு சுதான்சு திரிவேதி சுட்டிக்காட்டினார்.

>><><><<

தாம்பரம் சானடோரியத்தில் 137 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைப் பணிகள் விரைவில் நிறைவடையும் என்று மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனையில் நடைபெறும் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா உள்ளிட்டோருடன் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

20 நாட்களில் இந்தப் பணிகள் முடிவடைந்ததும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இதனை திறந்து வைக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>><><><<

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக் கண்ணன் - 39 செகண்ட்ஸ்)

>><><><<

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளத்தில் கிணற்றில் தவறிவிழுந்து உயிரிழந்த மாணவனின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

-----------

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியத்தில் 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான சாலை மேம்பாட்டுப் பணிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் குனிச்சி சுகாதார நிலையத்தில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

விழுப்புரம் மாவட்டத்தில் இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் ஆசிரியர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி இன்று தொடங்கியது.

------------

வேலூர் மாவட்டத்தில் சிப்பாய் புரட்சியின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

------------

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக தரவு தளத்தை உருவாக்கும் பணியினை ஆட்சியர் திரு ரத்தினசாமி ஆய்வு செய்தார்.

>><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

**Lords -**ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 89 ரன் எடுத்துள்ளது.

-------------

ஆசிய இளையோர் மல்யுத்தப் போட்டியில் இந்தியா 9 தங்கம் உள்ளிட்ட 19 பதக்கங்களை வென்றுள்ளது.

கிர்கிஸ்தானில் நடைபெற்ற 15 வயதிற்குட்பட்டோருக்கான இப்போட்டியின் ஆடவர் பிரிவில் 6 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களையும், மகளிர் பிரிவில் 3 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களையும் இந்தியா கைப்பற்றியது.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரத்யுஷா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 4-6, 6-1 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Jane Dunyon** -ஐ வென்றார்.

**>> End of News <<**